orientation
orientamento
berufsberatung
.ch

Informationen in anderen Sprachen
Informations en langues étrangères
Informazioni in lingue straniere

# எப்படியானது: „குறுகியகால தொழில்செய்தல்அறிமுகம்“?

## ஆபெல் மற்றும் மீர்யம் வாழ்வில் 3 நாட்கள்

வந்தாயிற்று! சரியான நேரத்திற்கு ஆபெல் Mechatronic நிறுவனத்தின் பிரதான வாசல் கதவின் ஊடாக நுழைந்து அங்கு „வரவேற்பாளர்“ என எழுதியிருந்த மேசையின் பின்பாக அமர்ந்திருந்த நபருடன் தொடர்பு கொண்டார். தனது பெயர் ஆபெல் மொன்ரெய்றோ, இன்று தனது குறுகியகால தொழில் செய்தல் அறிமுகத்தைத் தொடங்குவதற்காக வந்துள்ளதாக அங்கிருந்த நபருக்குத் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். அவர் கணனியில் ஒரு பார்வையை செலுத்தியபின் மிகவும் நட்புடன் “ஆம், நீங்கள் எதிர்பார்க்கப்படுகின்றீர்கள். தயவுசெய்து அமர்ந்து கொள்ளுங்கள். திரு. பிறவுன் அவர்கள் விரைவில் உங்களை அழைத்துச் செல்வார:.“ எனத் தெரிவித்தார்.

## முதல் மதிப்பீடு

ஒரு மூலையில் ஏற்கனவே ஒரு இளம்பெண் அமர்ந்திருக்கின்றார், அவர் ஏறத்தாழ ஆபெலின் வயதை ஒத்ததாகத் தெரிகின்றார். „நீங்களும் ஒரு குறுகியகால தொழில் செய்தல் அறிமுகம் செய்யப் போகின்றீர்களா“, எனக் கேட்கிறார். „ஆம், நீங்களும் அதற்காகவா? “ „நிச்சயமாக, நான் முடிந்தால் ஒரு வடிவமைப்பாளராக வர விரும்புகிறேன்.“ இந்த வேளையில் அவர்கள் இருவரையும் நோக்கி ஒரு இளம்பெண் வருகின்றா. „நீங்கள்தான் மீர்யம் றூலிக்கா? “, அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்கின்றா. „எனது பெயர் லீசா. நான் வடிவமைப்பாளராக மூன்றாவது வருடத்தில் கற்கிறேன் அத்துடன் உங்களை இந்தத் தொழில் அறிமுகத்தில் பராமரிக்கவுள்ளேன்.“ இருவரும் தமது கைகளைக் குலுக்கியபின் மின்தூக்கியை நோக்கிச் செல்கின்றனர். அவர்கள் மறைந்து சில வினாடிகளில் ஒரு இளைஞர் சிவப்பு மேலுடையுடன் வேகமாக இவரை நோக்கி நடந்து வருகின்றார், „கலோ ஆபெல், எனது பெயர் பிறவுண். தொழில் அறிமுகத்தில் நான்தான் உங்களைப் பராமரிக்கவுள்ளேன்.“ „இனிய காலை வணக்கம் பிறவுண்.“ „இதோ உங்களுக்குரிய பெயர் அட்டை. வாருங்கள் நாங்கள் இதனூடாக வேறு கட்டிடத்திற்கு செல்வோம்.“ ஆபெல் தனது பெயர் அட்டையை கதவு சென்சாரில் காட்டியவுடன் சுற்றும் சிறிய கதவு திறக்கிறது, அவர்கள் அதனூடாக உள்ளே செல்கின்றனர்.

## செய்முறை பயிற்சிகள்

லீசா மற்றும் மீர்யம் வேலைத்தல மண்டபம் ஊடாக வரும்போது, ஆபெல் ஒரு மின்வெளிச்சக் கருவியின் மின்கலன்கள் வைத்து இறுக அடைக்கும் மூடியில் புரிமுனை பகுதியை திரு பிறவுணின் மேற்பார்வையில் அரத்தால் சீராக்கிக்கொண்டிருந்தார். „நீங்கள் ஏற்கனவே வரவேற்பு இடத்தில் சந்தித்திருந்தீருஇகள். வடிவமைப்புப் பகுதியில் திட்டமிடும் வேலைகள் இந்த வேலைத்தலத்தில் தயாரிக்கப்படுகின்றது“, விளக்கினாா் லீசா. „பல்வகை திருத்துனர்களிடம் உ-ம். ஒரு செயல் திட்டத்திற்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகின்றது, அதாவது இதைத் தயாரிப்பதற்கு எவ்வளவு செலவாகின்றது“ என்பது குறித்துக் கதைத்தார்கள்.

ஆபெல் ஏற்கனவே மின்வெளிச்சக் கருவியை சரிபார்த்துக் கொண்டிருக்கிறார், இதை நாங்களும் வடிவமைக்கும் திட்டத்தில் பழகுவோம், மீர்யம். பிற்பகலில் திரு பிறவுண் துளையிடும் இயந்திரத்தை ஆபெலுக்குக் காட்டுகிறார். ஆபெல் மின்கலம் வைக்கும் இடத்தில் ஒரு துளையிட ஆரம்பிக்க இருந்த வேளையில், திரு பிறவுண் மீர்யத்துடன் அவரிடம் வந்தார். „சற்றுப் பொறுங்கள், அந்த இடம் நீளமாக அளக்கப்பட்டுள்ளது, மின்கலங்கள் சரியாகத் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் வடிவமைப்பை சரியாக்கியுள்ளோம். நீங்கள் இந்தப் புதிய அளவை மாற்றிக்கொள்ள வேண்டும்.“ ஆபெல் மீர்யத்தைப் பார்த்து சிரித்தபின்: „பிரச்சினை இல்லை!“ எனக் கூறுகிறார்.

## பிழைவிடுவதிலும் பார்க்க கேட்பது சிறந்தது

மீர்யம் மீண்டும் சென்றுவிட்டார் ஆபெல் புதிய வடிவமைப்பைக் கூர்ந்து கவனிக்கிறார். குழப்புகின்றது, நாங்கள் எப்படி இன்று காலை வரைபடத்தில் இருப்பது போன்று செய்தோம்? அவர் வடிவமைப்பைக் அங்கும் இங்கும் திருப்புவதுடன் மின்கலம் வைக்கும் இடத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார். இறுதியாக இரண்டையும் எடுத்துக்கொண்டு திரு பிறவுணிடம் செல்கின்றாருஇ, அவர் அவ்வேளையில் சிஎன்சி சுற்றுஇயந்திரத்தை திட்டமிட்டுக்கொண்டிருக்கிறார். இவர் மீர்யம் மாற்றியமைத்தது குறித்து அவரிடம் தெரிவித்ததுடன், மினக்கலம் வைக்கும் இடத்தை வரைபடத்தில் எங்கு ஆரம்பித்துள்ளா என்பது தனக்குத் தெரியவில்லை எனக் கூறுகிறார். „துவாரம் துளைக்காமல் முதலில் நீங்கள் என்னிடம் வந்து கேட்டது நல்ல விடயம்“, என்று கூறுகிறார் பிறவுண். „முதல் முறையிலேயே உங்களால் செய்து முடிக்க முடியும் என எவரும் எதிர்பார்க்க முடியாது. அத்துடன் வடிவமைக்கும் பகுதியில் பலவேளைகளில் திட்டமிட்டதின் பின்பாக எதையாவது மாற்றியமைப்பது அடிக்கடி இடம்பெறுவதுதான். ஆகவே நாங்களும் மாற்றங்களை ஏற்றுக்கொள்பவர்களாக இருக்க வேண்டும். பாருங்கள், இன்று காலை நீங்களே அடித்தளத்தை வரைபடமாகக் கீறியுள்ளீர்கள்.....

“17.00 மணிக்கு சிறிது முன்பாக திரு பிறவுண் ஆபெலுக்கு முன்பாக வந்தார்: „சிறிது நேரத்தில் வேலைநேரம் முடிகிறது. நீங்கள் அனைத்து ஓட்டைகளையும் போட்டீர்களா?“ „ஆம், ஆனால் எனக்கு மீண்டும் வழங்கப்பட்ட வரைபடத்தால் அதிக நேரம் எடுக்கவேண்டியிருந்தது அத்துடன் ஓட்டை போடுவதை விரைவாக்க வேண்டியிருந்தது. ஆனால் இனிமேல் இதை எப்படிச் செய்வது என்பதை மறக்காது இருப்பேன்“. திரு பிறவுண் ஓட்டைகளை பரிசோதித்தபின் அதைப் பாராட்டி ஆபெலின் தோழில் தட்டுகிறார். „மிகவும் நன்றாக உள்ளது“ என பாராட்டினார். “மீண்டும் நாளை சந்திப்போம், எவ்வாறு உள்ளே வருவதென்பது இப்போது உனக்குத் தெரியும் “. உன்னுடைய பெயர் அட்டையை மறக்க வேண்டாம்! „மீண்டும் சந்திப்போம் திரு பிறவுண் அத்துடன் மீண்டும் எனக்கு நீங்கள் விளங்கப்படுத்தியதற்கு நன்றி“ , கூறினார் ஆபெல்.

## குறித்துவைப்பது உதவும்

பேரூந்துத் தரிப்பிடப் பக்கமாக அவர் மீரயமை சந்திக்கிறார். „உமது திட்ட மாற்றத்தால் எனக்கு அவசரம் ஏற்பட்டது“. „அதை நான் வேண்டுமென்று செய்யவில்லை மன்னிக்கவும்“. ஆனால் நான் வடிவமைப்பை சரியாகச் செய்கிறேனா என்பதை லீசா பரிசோதித்தார். நான் முழுவதையும் சுருக்கக் குறிப்பேட்டில் எழுதவேண்டும். இப்போது ஆபெலுக்கு ஞாபகம் வருகிறது: அவரது ஆசிரியை அவர் எவற்றைச் செய்தார் மற்றும் அது எவ்வாறு அவருக்குப் பிடித்திருந்தது என்ற அனைத்தையும் குறிப்பெடுக்குமாறு கேட்டிருந்தார். இருப்பினும் பல மாற்றங்கள் காரணமாக அவர் முழுவதுமாக மறந்துவிட்டார். இன்று மாலை எனக்கு சுருக்கக் குறிப்பு எடுப்பதுதான் எனது வீட்டுப் பாடமாக இருக்கப்போகிறது, சலித்துக்கொண்டார் அவர். அடுத்த நாள் காலையில் பேரூந்தில் ஏறும்போது மீரயம் கேட்கிறார் „எப்படி, அனைத்து வீட்டுப்பாடங்களும் செய்தாயிற்றா? “ „ஆம், அதற்காகத் தொலைக்காட்சி முன்பாக நித்திரையாகி விட்டேன். இவ்வாறு இதுவரை நடக்கவில்லை, ஆனால் அதிகம் நின்றது என்னைக் களைப்படையச் செய்துவிட்டது. இருப்பினும் பின்பு நான் எழுதிவைத்துள்ளேன்.“ „மின்கலத்தை வைக்கும் இடத்தில் எங்கு கொழுவி வரவேண்டும் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது, எனவே கணனியில் மிக அவதானமாக வடிவமைப்பை சரியாக்க வேண்டியிருந்தது.

„எப்போது மதியஉணவை எடுக்கப் போகிறீர்கள்?“ இறங்கும்போது ஆபெல் கேட்கிறார். „உணவகத்தில் சந்திப்போமா?“ „எனக்குச் சரியாகத் தெரியவில்லை, ஒரு சிறு செய்தியை என்னால் உங்களுக்கு அனுப்ப முடியாது. கைத்தொலைபேசியை இடைவேளைகளிலும் வேலை முடிந்த பின்னருமே பாவிக்கலாம்,“ கூறினார் மீரயம். „சிலவேளை 12.30 மணிக்கு? லீசா மதிய உணவை எப்போதும் பிந்தியே எடுப்பார்.“ Mechatronic ல் இரண்டாம் நாள் காலை விரைவாகச் சென்றுவிட்டது. ஆபெல் அனைத்து ஓட்டைகளையும் போட்டுவிட்டார், அதன்பின் திரு பிறவுண் ஒரு இரும்புத் துண்டை வெட்டுவதை அவதானித்துக்கொண்டிருந்தார். மதிய உணவுக்கு முன்பாக அவருக்கு சுருக்கக் குறிப்பெடுப்பதற்கு நேரமிருந்தது. மீரயத்தை உணவகத்தில் அவரால் சந்திக்க முடியவில்லை, அவர் திரு பிறவுண் மற்றும் இரு திருத்துனர்களோடு உணவு உட்கொண்டார். இப்போது அவர் மீண்டும் வேலைக்கு வந்துவிட்டார். திரு பிறவுண் ஒரு பழைய கடச்சல் இயந்திரத்தில் எப்படி ஒரு அலைச்சுருளை வெட்டுவது எனக் காட்டுகிறார், அதன்பின் அவர் தனியாக அதைச் செய்ய முயற்சிக்கலாம். இரு கைகளும் வெவ்வேறு செயற்பாட்டைச் செய்வது கடினமானது. ஆபெல் கூம்பை உயர்த்துவது நேராக இல்லை, ஆனால் அவர் அதைக் கற்றுக்கொள்வார் என்கிறார் திரு பிறவுண். எவ்விதத்திலும் அவருக்கு ஆற்றல் இல்லாமலில்லை. ஆபெல் தனது குறிப்புப் புத்தகத்திற்காக தனது கைத்தொலைபேசியால் பழைய கடச்சல் இயந்திரத்தை ஒரு படம் எடுக்கலாமா என பிறவுணிடம் கேட்கிறார். அதற்கு பிறவுண், „கைத்தொலைபேசியால் செய்யும் பிரயோசனமான வேலையாக இது இருக்கும்“ என்கிறார் பிறவுண், அத்துடன் ஆபெல் நேற்று வேலை செய்த துளையிடும் இயந்திரத்தையும் பின்பு படம் எடுத்துக்கொண்டார்.

## தொடர்புகொள்ளல் மற்றும் சேர்ந்து வேலைசெய்தல்

மூன்றாவது காலையில் நேரத்திற்கு பேரூந்து வரவில்லை: ஆபெல் மிகவும் பிந்திவிட்டார்! அதிஸ்டவசமாக திரு பிறவுண் அவரது கைத்தொலைபேசி இலக்கத்தை அவருக்குக் கொடுத்திருந்தார். உடனடியாக ஆபெல் அவரைத் தொலைலேபேசியில் அழைத்தார். „கவலைப்பட வேண்டாம், ஆபெல், நானும் இறுகியுள்ளேன், அவர்களுக்கு பெரிய பிரச்சினை உள்ளது. இருப்பினும் நீங்கள் அழைத்தது மிகவும் நல்லது, முக்கியம் என்னவென்றால், ஒருவர் ஒருவருடன் தொடர்பு கொண்டு கதைத்துக் கொள்வதாகும். இறுதியாக நிறுவனத்திற்கு வந்துவிட்டார், திரு பிறவுண் அவருக்கு எவ்வாறு புரி வெட்டுவது என்பதைக் காட்டுகிறார். அதன்பின் ஆபெல் மின்ஒளிக் கருவிக்கு இரு பக்கத்திலும் புரி வெட்ட வேண்டும். இவ்வளவு துல்லியமாக ஆபெல் இதுவரை வேலைசெய்ததில்லை. அவர் தனது மின்ஒளிக் கருவியை ஒன்றாகச் சேர்த்துப் பூட்டும் வேளையில், லீசா மீரயத்துடன் வந்து சேர்ந்தார். முழுவதுமாக எப்படி இயங்குகின்றது என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். மின்கலன்கள் வைத்திருப்பது சரியாக குழாய்க்குள் நுழைந்தது குறித்து ஆபெல் பெருமைப்பட்டார். நீளம் சரியாகப் பொருந்தியதுடன் மின்ஒளிக் கருவி எவ்வித தொடர்பு ஆட்டமுமின்றி நன்றாக ஒளிபாச்சியது. திரு பிறவுண் அவரது சரியான வேலை குறித்துப் பாராட்டினார், அத்துடன் ஒன்று சேர்ந்து வேலைசெய்தமைக்காக, அனைத்து நான்கு நபர்களும் கைகளைக் குலுக்கிக் கொண்டனர். பிற்பகலில் திரு பிறவுண் ஆபெலுக்கு சுருக்கமாக தனது கருத்தைக் கூறினார். „நீங்கள் செய்த வேலையில், நான் மிகவும் திருப்தியடைகின்றேன்.

நீங்கள் மிக அவதானத்துடன் வேலை செய்ததை நான் கவனித்தேன் அது எனக்கு மிகவும் பிடித்துள்ளது. நீங்கள் ஒரு நல்ல திருத்துனராக வரலாம் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது“ என்று பிறவுண் கூறினார். „நீங்கள் தொழில் கற்பதற்கு ஒரு இடத்தைத் தேடினால் எம்மிடம் விண்ணப்பியுங்கள். உங்கள் துல்லியமான வேலை எனக்கு எடுத்துக் காட்டியுள்ளது.“ அத்துடன் மீரயமும் லீசாவிடமிருந்து பாராட்டுப் பெற்றார்: „மின்கலம் வைத்திருப்பதை எவ்வாறு அமைக்க வேண்டும் என நீங்கள் திட்டமிட்டது மிகவும் நன்றாக இருந்தது, நீங்கள் பிரச்சினையை நேரடியாக அணுகி அதைத் தீர்த்தது பாராட்டத்தக்கது. இவ்வாறான வடிவமைப்பாளர்கள் எமக்குத் தேவைப்படுகின்றார்கள்!“ இம்முறை ஆபெல் பேருந்து நிலையத்தில் மீரயமிற்காகக் காத்திருக்கிறார். „நீங்கள் இப்போதே வீட்டிற்குப் போகவேண்டுமா? அல்லது நாங்கள் சிறிது பேசிக் கொள்வோமா?“ நாங்கள் ஆற்றுப்பக்கம் செல்லலாம் என முன்மொழிகிறார். „மன்னிக்க வேண்டும், ஆபெல், எனக்கு 18.30 மணிக்கு கைப்பந்தாட்டப் பயிற்சி உள்ளது. ஆனால் நாம் சனிக்கிழமை பிற்பகல் படத்துக்குப் போகலாம். „சிறப்பான யோசனை,“ ஆபெல் மகிழ்ச்சியடைகிறார், „16.00 மணிக்கு ‚Abaton‘ முன்பாக? “ „சரி, வீட்டுப்பாடத்தை நன்றாகச் செய்யுங்கள்,“ பகிடியாகக் கூறிவிட்டு பேரூந்திலிருந்து குதிக்கிறார் மீரயம். „இருப்பினும் எவ்வாறு அனைத்து வடிவமைப்பாளர்களும் மிகவும் இளகிய மனமுள்ளவர்களாக உள்ளார்கள்? “ ஆபெல் மூளை யோசிக்கிறது. அதன்பின் அவர் தனது குறுகியகால தொழில் செய் அறிமுக பதிவுப் புத்தகத்தைப் புரட்டினார், வீட்டில் எதை மேலும் பதிவுசெய்ய வேண்டும் என்பது உடன் ஞாபகத்திற்கு வந்தது.